# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
## பெரும்பாக்கம், சென்னை 600 131.

### உடற்கல்வித்துறை ஆண்டறிக்கை 2023 – 2024

*2023-2024 கல்வியாண்டின் விளையாட்டு விழாவில் உடற்கல்வி துறையின் ஆண்டு அறிக்கையை சமர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.*

*உடற்கல்வி துறையின் உடற்கல்வி மன்ற கூட்டம் 25.09.2024 அன்று கல்லூரி முதல்வர் அறையில் முதல்வர் முன்னிலையில் நடைபெற்றது. மன்றத் தலைவராக கல்லூரி முதல்வர் முனைவர் எஸ் சக்தி அவர்களும் மன்ற செயலாளராக உடற்கல்வி இயக்குனர் முனைவர் இரா. ரம்யா அவர்களும் மன்ற உறுப்பினர்களாக கணினி அறிவியல் துறை தலைவர் பேராசிரியர் பி மலையரசு அவர்களும் தமிழ் துறை உதவி பேராசிரியர் முனைவர் தா செந்தில்குமார் அவர்களும் ஆங்கிலத் துறை உதவி பேராசிரியர் திருமதி Lt. செ. ஆறுமுகத்தாய் அவர்களும் கணினி அறிவியல் உதவி பேராசிரியர் முனைவர் திரு ஜே செந்தில் குமார் அவர்களும் மற்றும் மாணவ மாணவியச் செயலாளர்களும் கலந்துகொண்டு இவ் வருடத்தின் வரவு செலவு திட்டமிடுதல் குறித்து விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*நமது கல்லூரி மாணவ மாணவிகள் தங்களது விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தும் விதமாக பல போட்டிகளில் பங்கேற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். கணினி அறிவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவர் ஆகாஷ்*

மாநில அளவில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் இரண்டாம் இடத்தையும், கோவாவில் நடைபெற்ற16 வது தேசிய அளவிலான குத்துச்சண்டை போட்டியில் முதலிடத்தையும் பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். மேலும் இரண்டாம் ஆண்டு வேதியல் துறை மாணவி J. ஷாலினி மற்றும் முதலாம் ஆண்டு வணிகவியல் துறை மாணவிT. தாரணி ஆகிய இருவரும் மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் சிலம்பச் சண்டை, மான் கொம்பு போன்ற விளையாட்டுப் போட்டிகள் முதல் மற்றும் இரண்டாம் இடத்தை பெற்றனர் என்பதையும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது கல்லூரி ஆண்கள் கபடி அணி, கைப்பந்து அணி, இறகுப் பந்து அணி, கோ-கோ அணி, மட்டைப்பந்து அணி மற்றும் பெண்கள் பிரிவில் இறகுப்பந்து அணி , கோ-கோ அணிகள் சென்னை பல்கலைக்கழகத்தின் சார்பில் சென்னை பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று சிறப்பாக தங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வந்து பெருமை சேர்த்துள்ளனர். மேலும் சென்னை பல்கலைக்கழகத்தின் சார்பில் 2023-24 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான 55வது A. L முதலியார் தடகளப் போட்டி மேல் கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. அப்போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் கணினி அறிவியல் துறை மூன்றாம் ஆண்டு கோபாலகிருஷ்ணன், இரண்டாம் ஆண்டு கணினி அறிவியல் துறை மாணவன் ஜீவா, மூன்றாம் ஆண்டு கணினி பயன்பாட்டு இயல் துறை மாணவர் ஜெயபால் மூன்றாம் ஆண்டு நிறுமச் செயலமைத்துறை மாணவர் பிரகாஷ் மற்றும் மூன்றாம் ஆண்டு தமிழ் துறை மாணவி ஆஷா ஆகிய மாணவ மாணவிகள் பங்கு பெற்றனர் என்பதையும் பெருமையுடன்தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவ மாணவிகள் உடல் வலிமை மட்டுமல்லாது மன அளவிலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் கல்லூரி முதல்வர் மற்றும் கல்வி மன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன அவற்றின் முதலாவதாக ***21.06.23*** அன்று **யோகா தினத்தை** முன்னிட்டு ஈஷா யோகா மையத்துடன் இணைந்து மாணவ மாணவிகளுக்கு இரண்டு பிரிவுகளாக அடிப்படை யோகா பயிற்சி வழங்கப்பட்டது.***03.07.23*** மற்றும் ***04.07.23*** ஆகிய இரு நாட்கள் முதலாம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்கு உடற்கல்வி துறையின் சார்பில் *Orientation Program* நடத்தப்பட்டது. மேலும் ***05.07.23*** முதல் ***07.07.23*** வரையிலான மூன்று நாட்கள் மூன்று பிரிவுகளாக ஈஷா மையத்துடன் இணைந்து யோகா பயிற்சி நடைபெற்றது.இப் பயிற்சியில் மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் பங்கு பெற்றார்கள். ***06.08.23*** அன்று நடைபெற்ற மாநில அளவிலான மாரத்தான் போட்டியில் நமது கல்லூரியில் 100க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ***07.08.23*** முதல் ***22.08.23*** வரையிலான நாட்களில் மாணவ மாணவிகளுக்கு கல்லூரி அணிகளுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுக்கான தகுதி தேர்வு நடைபெற்றது. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் அடிப்படையில் கல்லூரி முதல்வரின் வழிகாட்டுதலின் மூலம் ***1200 மாணவ மாணவியர்களுக்கு*** மூன்று நாட்கள் ***(30.08.23 முதல் 01.09.23)*** *Heartfullness Institute* இருந்து தியான பயிற்சிகள் நடத்தப்பட்டன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2023-24 ஆண்டில் மாணவ மாணவிகளுக்கு துறைவாரியாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன மாணவர்களுக்கு குழு போட்டிகளாக கபடி கைப்பந்து கோ-கோ இறகுபந்து மட்டைப்பந்து மற்றும் சதுரங்கம் போன்ற போட்டிகளும் மாணவிகளுக்கு கபடி கையெறிப்பந்து கோ-கோ

இறகுப்பந்து சதுரங்கம் மற்றும் கல்லூரியில் முதல்முறையாக மாணவிகளுக்கு மட்டைப்பந்து போட்டிகளும் நடைபெற்றன. தனிநபர் போட்டிகளாக **100** மீட்டர் **200** மீட்டர் **400** மீட்டர**800** மீட்டர் **1500** மீட்டர் **4×100** மீட்டர் தொடர் ஓட்டம் மற்றும் **4×200** தொடர் ஓட்டம் வட்டஎறிதல் குண்டுஎறிதல் போட்டிகளும் மாணவ மாணவியர்களுக்குநடைபெற்றன.

கல்லூரி முதல்வர் முனைவர் எஸ் சக்தி அவர்களின் வழிகாட்டி அடிப்படையில் இரண்டு பிரிவுகளாக **06.08.23 முதல் 17.08.23** வரையிலான நாட்களிலும், **24.01.24** முதல் **02.02.24** வரையிலான நாட்களிலும் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டன. மாணவ மாணவிகள் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் போட்டிகள் பங்குகொண்டார்கள்.

மாணவ மாணவியரை ஊக்கப்படுத்தும் விதமாக துறைகளுக்கிடையான விளையாட்டுப் போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்று முதலிடத்தில் வரும் துறைக்கு மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் தனித்தனியாக ஒட்டுமொத்த சுழல் கோப்பையும் மற்றும் துறைக்கான கோப்பையும் வழங்கப்பட உள்ளன. மேலும் தடகள போட்டிகள் பங்கேற்று அதிக புள்ளிகள் பெற்ற மாணவ மாணவியருக்கு தனித்தனியாக தனிநபர் கோப்பைகளும் வழங்கப்பட உள்ளன. இவ்விழாவில் துறைகளுக்கிடையே நடைபெற்ற அணிவகுப்பில் சிறந்து விளங்கிய முதலிடம் பிடித்த அணிகளுக்கு சுழல் கோப்பை தனிநபர் கோப்பை மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

மாணவர் மாணவியர் மட்டுமல்லாது கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கும் சதுரங்கம் இறகுப்பந்து, மட்டைப்பந்து மற்றும் குண்டறிதல் போன்ற விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டன. விளையாட்டுப் போட்டிகளில் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்று பெற்று பரிசுகள் பெற உள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவ மாணவிகள் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கு பெற்று மென்மேலும் வளர நமது கல்லூரி முதல்வர் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்களை விளையாட்டில் ஊக்கப்படுத்தும் விதமாக இறகுப்பந்து போட்டி குமரன் நகரில் அமைந்துள்ள ACES இறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏதுவாக விளையாட்டு மைதானத்தை சீர்படுத்த உதவிய கல்லூரி மட்டைப் பந்து பயிற்சியாளர் திரு பெரியசாமி அவர்களுக்கு கல்லூரி சார்பிலும் உடற்கல்வி துறையின் சார்பிலும் எனது மனமார்ந்த நன்றிணை தெரிவித்துக் கொள்கிறேன். மைதானத்தை சீர்படுத்த உழைத்த மற்றும் அனைத்து போட்டிகளும் சிறப்பாக நடத்திட தன்னார்வத்துடன் செயல்பட்ட எங்கள் மாணவ மாணவிகளுக்கும் உடற்கல்வி துறையின் மூலம் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவ மாணவிகளின் உடல் வலிமை மற்றும் மன வலிமையிலும் சிறந்து விளங்கும் நல்லெண்ணத்துடன் கல்லூரி முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் மாணவ மாணவிகளுக்கு சிலம்பப் பயிற்சி திரு தனபால் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. சில பயிற்சிகளை மாணவ மாணவிகள் இன்று விளையாட்டு விழாவில் சிறப்பாக செய்து காண்பித்தனர். பயிற்சி அளித்த பயிற்சியாளர் அவர்களுக்கு உடற்கல்வி துறையின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரியில் நடைபெற்ற அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் பயிற்சி பட்டறை வகுப்புகளும் மற்றும் சிலம்பம் பயிற்சிகளும் சிறப்பாக நடத்திட உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கிய எமது கல்லூரி முதல்வர் முனைவர் எஸ் சக்தி அவர்களுக்கும் , உடற்கல்வி மன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து துறை தலைவர்களுக்கும், அனைத்து பேராசிரியர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் மேலும் கல்லூரி காவலாளி திரு ஜெயக்குமார் அவர்களுக்கும் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கும் உடற்கல்வி துறையின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

***விளையாட்டு மைதானங்கள் அதிகமானால் மருத்துவமனைகள் குறையும்***

நன்றி வணக்கம்.